

**Inauguration of Online Inclusive summer camp for PwDs 12.05.21**

## முட்டுக்காடு – ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்க்கான தேசிய நிறுவனத்தில்

# மாற்றுதிறனாளிகளுக்கான ஒரு மாதம் கோடை கால பயிற்சி வகுப்பு





முட்டுக்காடு, மே.12–

மாற்று திறனாளிகளுக்கான இணைய வழி கோடைகால பயிற்சி முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் மாற்று திறனாளிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு வகையான சேவைகளை செய்து வருகிறது.


இதன் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் இந்நிறுவனத்தில் இயங்கும் பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளி காணொளி வாயிலாக ஒரு மாத காலத்திற்கு கோடைகால பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடுசெய்திருந்தது.இதன் துவக்க விழாவானது 12 மே 2021 புதன்கிழமை அன்று நடைபெற்றது.இவ்விழாவில் திருமதி லீலாவதி, பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளி முதல்வர், வரவேற்று பேசினார். கோடைகால சிறப்பு பயிற்சிகள் பற்றி திரு காமராஜ் விளக்கிகூறினார். இந்த விழாவை திரு நசிகேதா ரௌட், இயக்குனர், அவர்கள் துவக்கிவைத்து துவக்க உரையாற்றினார். இந்த பயிற்சி முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு உடற்பயிற்சி,யோகா,கலை மற்றும் கைத்திறன் பயிற்சி போன்றவை இலவசமாக கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு.மதி, முதல்வர்,பொன்வித்யாஸ்ரம், திருமதி. மங்கையர்க்கரசி, முதல்வர், சுதானந்த வித்யாலயா, சமக்ரக ஷிக் ஷா அபியான் ஒருங்கிணைப்பாளர் திரு ஜனார்தனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இப்பயிற்சியில் 150 க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகளுடன் பெற்றோர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பொன் வித்யாஷ்ரம் பள்ளி மாணவர்கள்,ஆசிரியர்கள், சுதானந்தா வித்யாலயா பள்ளி மாணவர்களும் பங்கேற்றனர்.

இந்த பயிற்சி முகாமை ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் இயங்கும் பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளியின் முதல்வர் லீலாவதி மற்றும் சிறப்பு பள்ளிஆசிரியர்கள்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

**Mallai News – 12.05.21**

சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.


# மாற்று திறனாளிகளுக்கான இணைய வழி கோடைகால பயிற்சியின் தொடக்க விழா




சென்னை, மே.13–

முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் மாற்று திறனாளிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு வகையான சேவைகளை செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் இந்நிறுவனத்தில் இயங்கும் பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளி காணொளி வாயிலாக ஒரு மாத காலத்திற்கு கோடைகால பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழாவில் லீலாவதி, பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளி முதல்வர், வரவேற்று பேசினார். கோடைகால சிறப்பு பயிற்சிகள் பற்றி காமராஜ் விளக்கிகூறினார். இந்த விழாவை நசிகேதா ரௌட், இயக்குனர், துவக்கிவைத்து துவக்க உரையாற்றினார். இந்த பயிற்சி முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு உடற் பயிற்சி, யோகா, கலை மற்றும் கைத்திறன் பயிற்சி போன்றவை இலவசமாக கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக முதல்வர், பொன் வித்யாஸ்ரம், மங்கையர்க்கரசி, முதல்வர், சுதானந்த வித்யாலயா, சமக்ரக ஷிக் ஷா அபியான் ஒருங்கிணைப்பாளர் திரு ஜனார்தனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இப்பயிற்சியில் 150 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள், குழந்தைகளுடனும் சிறப்பு ஆசிரியர்கள், பொன் வித்யாஷ்ரம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், சுதானந்தா வித்யாலயா பள்ளி மாணவர்கள் என பலரும் பங்கேற்றனர். இந்த பயிற்சி முகாமை ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் இயங்கும் பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரிப்பள்ளியின் முதல்வர் திருமதி லீலாவதி மற்றும் சிறப்பு பள்ளி ஆசிரியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.



**Ullatchi Murasu - 13.05.21**

# NIEPMD launches summer programme

The Model School for Children with Multiple Disabilities of NIEPMD (National Institute for Empowerment of Persons with Multiple Disabilities) is organising the Online Inclusive Summer Programme for persons with disabilities from May 12 to June 12.

At the inauguration of the programme on May 12, Nachiketa Rout, Director, NIEPMD, said that this programme is first of its kind and very unique because it included two students and teachers of two CBSE schools and children with special needs from Kancheepuram, Chengalpattu, Chennai and Thiruvallur districts, as part of the Samagraha Shiksha Abhiyan of Government of India.

The special guests of the programme were V.N.Mathi, Principal - Pon Vidyashram; Mangayarkarasi, Principal - Sudhananda Vidyalaya; and Janarthanan, Coordinator - Samagrah Shiksh Abhiyan. The activities include warm up, physical exercise, yoga arts and crafts work.

About 150 persons including persons with disabilities, parents of persons with disabilities, special teachers and staff participated in the programme.

**Adyar Times 16.05.21**

## ஊனமுற்றோர் தேசிய நிறுவனத்தில்

# காணொலியில் கோடைகால பயிற்சி வகுப்பு தொடக்கம்

**கேளம்பாக்கம்**

முட்டுக்காடு பகுதியில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான ஒருமாத கோடைகால பயிற்சி வகுப்பு காணொலி காட்சியில் நேற்று தொடங்கியது.

ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் கோடைகால பயிற்சிவகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், மாற்றுத் திறனாளிகளுக்கு உடற்பயிற்சி, யோகா, கலை மற்றும் கைத்திறன் பயிற்சி போன்றவை இலவசமாக கற்றுக்கொடுக்கப்படுகின்றன. காணொலி காட்சி மூலம் ஒருமாத காலம் நடைபெற உள்ள இப்பயிற்சி வகுப்பின் தொடக்க விழா, மாற்றுத் திறனாளிகளுக்கான மாதிரி பள்ளியில் நேற்று நடைபெற்றது.

மேற்கண்ட நிறுவனத்தின் இயக்குநர் நசிகேதா ரௌட் காணொலி காட்சி மூலம் பயிற்சி வகுப்பை தொடங்கி வைத்து உரையாற்றினார். கோடைகால சிறப்பு பயிற்சிகள் குறித்து சிறப்பு கல்வி விரிவுரையாளர் காமராஜ் விளக்கிக் கூறினார். இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினர்களாக தனியார் பள்ளியின் முதல்வர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி பள்ளியின் முதல்வர் லீலாவதி, சமக்ரக ஷிக்ஷா அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜனார்தனன், சிறப்பு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு குழந்தைகள், பெற்றோர்கள் என பலர் பங்கேற்றனர்.

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர்,

asturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chen

**Hindu Tamil.13.05.21**

10:08 95%

Tweet

**PIB in Tamil Nadu**
@pibchennai

A month long unique virtual Summer Camp in Chennai. Students of regular schools and from Model School of #NIEPMD participate in events like arts, sorts, yoga, music, dance and other empowerment activities.

@TCGEHLOT @MSJEGOI @socialpwds @PIB_India @mkstalin @airnews_Chennai




202 views

Tweet your reply

**PIB chennai Twitter 13.05.21**